பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | வைகாசி 21 | றஜப் 19 | இதழ் 114

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 3-6-80

RECEIVED 1980-6- PERIODICALS DIVISION UNIVERSITY OF ... LIBRARY

## ✯ அவ்றோ விமான எரிப்பு வழக்கு: விமானத்தில் 2பேர் குனிந்து எதையோ எடுத்தனர்

### விமானி சாட்சியம்

(கொழும்பு)

பலாலியிலிருந்து இரத்மலானைக்கு நான் ஓட்டிவந்த விமானம் இரத்மலானையில் நிறுத்தப்பட்டு பிரயாணிகள் இறங்கியபோது இருவர் இரு ஆசனங்களுக்கிடையில் குனிந்து நின்றதைக் கண்டேன். அவ்விருவரில் ஒருவர் இங்கு எதிரிக்கூண்டில் நிற்பவரைப் போன்ற தோற்றமுடையவர். எனினும் சம்பவம் நடைபெற்று இரண்டு ஆண்டுகள்

(5-ம் பக்கம் பார்க்க)

# யாழ். மத்திய கல்லூரி ஒருவாரம் மூடப்பட்டது!

## மாணவர் உண்ணாவிரதமும் அதுவரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபரை இடமாற்றம் செய்யக் கோரியும் மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்றுக்காலை மாணவர்கள்பலர் ஆரம்பித்த உண்ணாவிரதம் யாழ்ப்பாண எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், வடமாநில வித்தியாதிபதி திரு தி. மாணிக்கவாசகர் ஆகியோர் மாணவர்களின் கோரிக்கையை ஒரு வாரகாலத்திற்குள் நிறைவேற்றி வைப்பதாகவும், நீதி வழங்கப்படுமென்றும் வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்தும், இம் மாதம் ஐந்தாம் திகதி நடைபெறவிருக்கும் எதிர்ப்புத் தினத்தையொட்டி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கும் சட்டத்திற்குட்பட்ட சில நடவடிக்கைகள் உண்ணாவிரதத்திலீடுபட்டிருக்கும் மாணவர்களைப் பாதிக்கக் கூடுமென்று யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.வெஸ்லி விக்கிரமசூரியா கூறிய ஆலோசனைக்கிணங்கவும் மாணவர்கள் தமது உண்ணாவிரதத்தை அடுத்த திங்கட்கிழமைவரை ஒத்திவைத்துக் கலைந்து சென்றனர்.

இந்த சமயம் யாழ்.மத்தியகல்லூரியை அடுத்த திங்கள்வரை மூடிவிடுவதென்று அதிபர் கூட்டிய ஆசிரியர் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அதன்படி கல்லூரியும் மூடப்பட்டுவிட்டது.



யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு ஈ கே சண்முகநாதனை இடமாற்றம்செய்யவேண்டுமெனக் கோரியும் வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் சுலோக அட்டைகளுடன், மத்தியகல்லூரி மாணவர் உண்ணாவிரதம் இருப்பதை முதல் படத்திலும், யாழ்ப்பாணம் எம் பி திரு வெ யோகேஸ்வரன் மாணவர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்

# மாணவரின் ஒரு நாள் விரதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதனை இடமாற்றம் செய்யுமாறு கோரி நேற்று காலை, மத்தியகல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். இதேசமயம், அதிபர் ஈ. கே. சண்முகநாதன் ஒரு வாரகாலத்தில், பதவியிலிருந்து வெளியேற சம்மதம் தெரிவித்துள்ளார், பங்கொக் செல்லும் விளையாட்டு கோஷ்டியில் மத்தியகல்லூரி மாணவனையும் இடம்பெற ஏற்பாடுசெய்வதாகவும் மாணவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒருவாரகால அவகாசம் தருமாறும் வடமாநில கல்வி அதிபர் திரு ரி. மாணிக்கவாசகர் மாணவர் மத்தியில் தெரிவித்தபோதிலும், உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

மத்திய கல்லூரி அதிபர் திரு ஈ. கே. சண்முகநாதன் வெளியேற வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுக்காலை மாணவர்கள் பலர் சுலோக அட்டைகளுடன் மத்திய கல்லூரி மைதானத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து மற்றும் மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்து மைதானத்தில் மறியல் செய்தார்கள். மிகக் குறைவான மாணவர்கள் மட்டும் கல்லூரிக்கு சென்றிருந்த போதிலும், வகுப்புகள் நடைபெறவில்லை.

மைதானத்திற்கும் கல்லூரிக்குமிடையிலுள்ள வீதியில் பெற்றோர்களும், பழைய மாணவர்களும் பெருமளவில் காணப்பட்டனர்.

கடந்தஒரு மாதமாக கல்லூரியைப் பகிஷ்கரித்து வரும் மாணவர்கள் நேற்று முதல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

நேற்றுக்காலை 8 மணி முதலே பொலிஸார் மைதானத்திற்கு வந்திருந்தனர். கல்லூரியைச் சுற்றியுள்ள நான்கு சந்திகளிலும் இன்ஸ்பெக்டர் திரு. சிற்றம்பலம் தலைமையிலான பொலிசார் கடமையாற்றினர். வேம்படிச் சந்திக்கு வந்த உயர்வகுப்பு மாணவர்களை மணிக்கூண்டு வீதிக்குச் செல்லவிடாது பொலிசார் தடுத்து நிறுத்தி திரும்பிப் போகும்படி கட்டாயப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

உயர் வகுப்பு மாணவர்கள் பிரதான வீதியல் சந்திக்கும் இடங்களில் நின்ற மாணவர்களை வீதிகளில் நிற்க வேண்டாமென்றுகூறி மைதானத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தனர்.

### யாழ். எம்.பி. பேச்சுவார்த்தை

காலை 9 மணிபோல் யாழ்ப்பாண எம் பி. திரு. வி. யோகேஸ்வரன், மைதானத்திற்கு வந்து மாணவ தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்

கல்லூரிக்குத் திரும்பிச் செல்லுமாறும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென்றும் அவர் உறுதியளித்த போதிலும் 'அதிபர் வெளியேறும்வரை கல்லூரிக்கு செல்லமாட்டோம்' என மறுத்துவிட்டனர் மாநகரசபை உறுப்பினர் திரு அலோசியஸ் மற்றும் பெற்றோரும், கூட்டணி பிரமுகர்களில் சிலரும், சமரசமுயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

### யோசனை நிறைவேறவில்லை

பெற்றோர், பழைய மாணவர், கல்லூரி அபிவிருத்திச் சபை ஆகியவற்றை ஒன்று கூட்டி அதில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று பெற்றோர் ஒரு யோசனையை முன்வைத்தனர். இதனை மாணவர்கள் ஏற்றுக் கொண்ட போதிலும், அது நடைபெறவில்லை.

நேற்றுக்காலை அதிபர் திரு. சண்முகநாதனை வடமாநில கல்வி அதிபதி திரு ரி மாணிக்கவாசகர் மற்றும் யாழ். கல்வி இலாகா அதிகாரிகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மாணவர் தலைவர்களிடம் உண்ணாவிரதப் போராட்டத்திற்கான காரணம் என்ன? என்று சில பெற்றோர்கள் கேட்டனர்.

### வரவு--செலவு இல்லை

10 வருட காலம் கல்லூரிக்கு [illegible]

[8-ம் பக்கம் பார்க்க]

## செங்கலடி வங்கிக் கொள்ளை: விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

செங்கலடிக் கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கு. நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. சிவா செல்லையா முன்னிலையில் 18ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

விசாரணையின்போது சான்றுப் பொருட்கள் நீதிமன்றத்தில் தயாராக வைக்கப்படாமையால் வழக்கு இம்மாதம் 18ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஜூரர்கள் இல்லாது நடைபெறும் (ப)

### மாவட்ட அபிவிருத்தி சபைகள்

## "தமிழருக்கு பயனில்லை: அதனை ஏற்கலாகாது"

### நவசமசமாஜப் பிரமுகர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களைத் தம்வசப்படுத்த, மாவட்ட அபிவிருத்தி சபையை ஜனாதிபதி கொண்டுவரவிருக்கிறார். இச் சபையினால் தமிழினத்திற்கு எவ்வித பயனும் இல்லை ஆகையால் இதனைத் தமிழினம் ஏற்காது. கடந்த கால் நூற்றாண்டு காலமாக எந்த உரிமைகளுக்காகப் போராடிவந்தார்களோ அவற்றுக்குத் தொடர்ந்தும் போராட வேண்டும்."

யாழ். நகரமண்டபத்தில் நடந்த தேசிய எதிர்ப்புத்தின ஆதரவுக் கூட்டத்தில் பேசிய நவலங்கா சமசமாஜக்கட்சி பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

ஜூன் 5ந் தேதி நடைபெறவிருக்கும் தேசிய எதிர்ப்புத் தினத்தை ஆதரித்து திரு. கு. பராராஜசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கலாநிதி கருணாரத்ன தொடர்ந்து கூறியதாவது:

### முக்கிய பொறுப்புக்கள் இல்லை

"நாட்டின் பாதுகாப்பு

(5-ம் பக்கம் பார்க்க)

## ஆனமடுவ தேர்தல் ஆட்சேபமனு தாக்கல்

(கொழும்பு)

ஆனமடுவ இடைத்தேர்தல் முடிவை ஆட்சேபித்து டி. டி. விமலசூரியா என்பவர் நீதிமன்றத்தில் மனுவொன்றை நேற்றுத் தாக்கல்செய்தார் இந்த மனுவில் ஆனமடுவ

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சற்பூரவேலை தெரிந்த பெண்கள் தேவை. தொடர்பு கொள்ளுங்கள். செல்வன் ஸ்ரோர்ஸ் (மேல் மாடி) No. 1026, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். 5932

### விற்பனைக்கு

தனிநபர் பராமரிப்பிலுள்ள ஹொண்டா ரேட்மாஸ்டர் 185— 0 சிறி தொடரிலக்கமுடையது உடன் விற்பனைக்குண்டு. ந. அரியரத்தினம், புளியம்பொக்கணை 5933

## ஊறணி அந்தோனியார் உற்சவம்

(காங்கேசன்துறை)

ஊறணி புனித அந்தோனியார் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 6 மணிக்கு திருப்பலிப்பூசை நடைபெறும். 12-ந் திகதி மாலை திருச்சொரூப பவனியும் தொடர்ந்து திருப்பலிப்பூசையும் நற்கருணை பூசையும் இடம்பெறும்.

13-ந் திகதி காலை திருநாட்பாடல் பூசையுடன் உற்சவம் முடிவுறும்.

பங்குக்குருவாா் அருட்திரு. பிரான்சிஸ் அடிகளார் பூசை ஆராதனைகளை நிறைவேற்றி வைப்பார். (ஈ)

கார்கடத்தல், வங்கிக்கொள்ளை:

# சந்தேகநபர் வாமதேவன் பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

கார் ஒன்றை கொள்ளையடித்தது தொடர்பாக நபர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிமன்றத்தில் புலி இயக்கம் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அச்சந்தேக நபர் 5000 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு வழக்கின் விசாரணை ஜூலை 9-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கார்கொள்ளை வங்கிக் கொள்ளை போன்ற பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு மஸ்கெலியாவில் வைத்து கைதான கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவரான நன்னித்தம்பி வாமதேவன் என்பவர் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் மீது அச்சுவேலியைச் சேர்ந்த ஆழ்வான் இராஜதுரை என்பவரது 18 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்ரீ. எல் 5733 இலக்க காரை கொள்ளையடித்தது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதும் கடந்த இரண்டரை வருடங்களாக றிமாண்டிலிருந்து வரும் இச் சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றத்தில் இதுவரை ஆஜர் செய்யப்படவில்லை.

நேற்றுமுன்தினம் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் இந்நபர் கொண்டுவரப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு ரி. தம்பிரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

அச்சமயம் இவரது சார்பில் சட்டத்தரணி திரு ஆர் ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். மேற்படி நபர்மீது இக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு 13-2-78 "பி" றிப்போட் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் 23-10-78 வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட போதும் இவர் இன்றுதான் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளார். இவரை இக்குற்றச் சாட்டில் பிணையில் விடவேண்டுமெனக் கோரினர்.

இவர் புலிஇயக்கத்தைச் சேர்ந்தவரென்றும் இவருக்கு வேறுபல வழக்குகளும் உண்டென்றும்கூறி இவரைப்பிணையில் விடுவதை காங்கேசன்துறை பொலிசார் ஆட்சேபித்தனர்.

இவர் புலி இயக்கத்தை சேர்ந்தவரா? அல்லவா? என்பது பற்றி நாம் இங்கு ஆராயவில்லை இவர் மீது குற்றச்சாட்டு என்ன? அதற்குப்பிணை வழங்கலாமா? என்பது பற்றித்தான் இங்கு ஆராய வேண்டியுள்ளதென பதில் நீதிபதி தெரிவித்தார். இச்சமயத்தில் இக்குற்றச்சாட்டுக்கு பிணைவழங்கலாம் என சட்டத்தரணி ஆர் ஜே செல்வரத்தினம் சுட்டிக்காட்டவே பதில்நீதிபதி சந்தேக நபரை 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்து வழக்கு விசாரணையை ஜூலை 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினத்துடன் சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு எஸ். புண்ணிய மூர்த்தி செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும் ஆஜராகினர்.

## பொறியியல் பயிற்சிக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன் சேனுதிராஜா தனஞ்சயன் "அவ்ரோ" இயந்திர பொறியியல் துறையில் 5 வருடகாலப் பயிற்சியை மேற்கொண்டு சிங்கப்பூர் பயணமானார்.

பயிற்சிக்கு "எயர்லங்கா" நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது இலங்கையருள் தனஞ்செயனும் ஒருவர். இவர்களுக்கான பயிற்சி ஒரு வருடம் சிங்கப்பூரிலும் 4 வருடம் அமெரிக்காவிலும் நடைபெறும்.

கல்வியில் சிறந்து விளங்கிய தனஞ்செயன் தனது பள்ளிப் பருவத்தில் கிரிக்கெட், மெய்வல்லுநர் துறையிலும் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார்.

இவர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனுதிராஜா தம்பதிகளின் புதல்வனாவார். (வெ. அ)

## தமிழ்நாட்டில் அமிர், தொண்டமான்

(சென்னை)

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. தொண்டமான் ஆகியோர் தத்தம் மனைவிமார் சகிதம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்னை அட்ஸ்பெரி மண்டபத்தில் நடைபெற்ற திருமணமைம் ஒன்றில் கலந்து கொண்டனர்.

ஆனால், பிரிலங்க இண்டஸ்ரீஸ் உரிமையாளரும் பிரபல தொழில் அதிபருமான திரு. தர்மலிங்கம் தம்பதிகளின் புதல்வி டாக்டர் சூர்யகலாவுக்கும் தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீகுமாருக்கும் நேற்று திருமணம் நடைபெற்றது. (இ)

## நெடுங்கேணி குடியேற்றம்

# இளைஞர் பேரவை விரைவில் போராடும்

### பொதுச்சபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வவனியா மாவட்டத்துடன் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இணைக்கும் நடவடிக்கையை ரத்துச்செய்யும்படி கோரியும் தமிழ்ப் பகுதியான நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரியகுண்டான் பகுதியில் திட்டமிட்டு மேற்கொண்ட சிங்களக் குடியேற்றத்தை உடனே வெளியேற்றுமாறு கோரி இளைஞர்பேரவை தொடர்ச்சியான போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்கும்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேரவை பொதுச்சபைக் கூட்டத்தில் செயற்குழுக் கூட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அதன் விபரம் வருமாறு:

இளைஞர் பேரவை ஜூன் 5-ம் திகதியை யு. என். பி. அரசின் பாசிஷ ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தினமாக பிரகடனப்படுத்துகின்றது. இத்தினத்தில் மக்கள் தொழிலாளர் மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் கறுப்புப்பட்டி அணிந்து, எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் கொடிகளை வீடுகளிலும் பொது இடங்களிலும் ஏற்றியும் தமது வழமையான எதிர்ப்பை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். மூதலாளித்துவ இனவாத யு. என். பி அரசு திட்டமிட்டு நடாத்திய வவனியாமாவட்டத்துடன் மூன்று சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இணைத்த நடவடிக்கைகளையும், ஏவ்வாறுன சட்டத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி மாற்ற முடியாதவாறு அரசியல் அமைப்பினை மாற்றி எடுத்த நடவடிக்கையையும் நாம் பாரதூரமான நடவடிக்கைகளாகக் காணுகிறோம். (சொர்-இ)

## பயணம்சிரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நவால் வடக்குக் கிராமசபை வருத்திச்சங்கம், நவாலி ஆரியப்பிட்டி பயணத்தில் புனரமைப்பு வேலைகளை சிரமதானம் மூலம் மேற்கொண்டது.

இப் புனர்நிர்மாணப் பணியை மேற்படி சங்கத் தலைவர் திரு.சி.ப.வேலாயுதப்பிள்ளைசரம் பித்துவைத்தார். [வெ-அ]

## நல்ல நூல்களை கற்றதேபயன்தரும்

(சுழிபுரம்)

நல்ல நூல்களை கற்றுவல்லவர்களாகவும் நல்லவர்களாகவும் வாழ்வதே எமது தாழ்வின் பயனாகும். இளமைக்காலமே கல்வி கற்பதுக்குரிய காலமாகும். மனனம்செய்பவர்கள் ஒரு போதும் முதுமைக் காலத்தில் பாடல்களை மனனம் செய்ய முடியாது. ஆதலால் இளையோர் பாடமாக்க வேண்டியவற்றை உடனே மனனம் செய்வது மிகவும் பொருத்தமாகும் மன அமைதிக்கு இறை வணக்கமும் திருமுறை மனனமுமேசாந்திதரக் கூடியதாகும்இவ்வாறுசுழிபுரம் பறுளை முருகன் கோவிலில் நடைபெற்ற கந்தரனுபூதி பல்சளிப்பு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசிய பிரம்மஸ்ரீ ச. சண்முகரத்தினசர்மா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கந்தரநுபூதி பாடல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியருக்கு பொற்கிழி வழங்கப்பட்டது. பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தேவன், வே. நடராசா பாராட்டுரை வழங்கினர்.

# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும் படி யாழ். ரோட்டறிக் கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
508 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ............ சிறந்த சாரதி பெயர் ............

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்பவர்கள் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No.............)

அனுப்புபவர் பெயர்........................ஒப்பம்........

விலாசம்..........................................

## ஊழியர்கள் தேவை

அனுபவங்கள்
புத்தக வியாபாரம்
கடுதாசி ஸ்ரேசனெறி வியாபாரம்
பத்திரிகை, சுவீப் ரிக்கற் டிலிவறி
இயந்திர சாதன மூலம் றூள் போடுதல்
புத்தகம் கட்டுதல்
இயந்திரக் கட்டரில் புத்தகம், கொப்பிகள் வெட்டல்
புத்தகங்கள், கொப்பிகள் பின் பண்ணுதல்
மேற்படி வேலைகள் தெரிந்த
மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும்
நேரில் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.

### பூபாலசிங்கம் புத்தகசாலை,

இல: 44, பஸ்நிலைய முகப்பு,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காங்கேசன்துறை - ஊறணி

## புனித அந்தோனியார் ஆலய கட்டிட நிதி

இவ்வாலயம் முற்றிலும் புனர் நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளதால் இதற்கு வேண்டிய நிதியுதவி நல்குமாறு அன்பர்களைப் பணிவுடன் வேண்டுகிறோம். உற்சவ ஆரம்பம்: 3-6-80. திருநாட்பலி; 13-6-80

நிதி உதவி தர விரும்புபவர்கள் பங்குத் தந்தையிடம் நேரிலோ தபால் மூலமோ செலுத்தலாம்.

ஆலய புனரமைப்புச் சபை.

5939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அறிஞனுக்கும், ஞானிக்குமிடையில் பெரிய வித்தியாசம் உண்டு. ஒரு அறிஞனின் மனம் எப்போதும் பெண்ணின் மீதும் தங்கத்தின் மீதும் இலயித்து நிற்கும். ஞானியின் மனமோ ஆண்டவனின் பாத கமலங்கள் மீதே லயித்துநிற்கும்.

பகவான் ராமகிருஷ்ணர்.

# பேச்சு வார்த்தை ஒப்பந்தம் மூலம் 'தமிழ் ஈழம்' பெறவே முடியாது

## ஆயுதப்போராட்டமே ஒரேவழி'

## என்கிறார் குமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழத்தை பேச்சு வார்த்தை ஒப்பந்தம் மூலம் ஒருகாலமும் பெற முடியாது ஏனெனில் ஒருகாலத்தில் தென்னிந்தியாவிலுள்ள தமிழ் நாடும் தமிழ் ஈழமும் சேர்ந்து சிங்கள ஸ்ரீலங்காவை ஒழித்துக்கட்டிவிடும் என்ற அச்சம் சிங்கள மக்களின் மனதில் இல்லாமலில்லை. இந்த நிலையில் எந்த சிங்கள தலைவராவது பேச்சுவார்த்தை மூலம் தமிழ் ஈழத்தை] தரமாட்டார்கள்' ஆயுதப்போராட்டம் ஒன்றின் மூலம் தான் தமிழ் ஈழத்தை பெறமுடியும்.

குருநகரில் அண்ணா சிலைக்கு சமீபத்தில் நடந்த தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கில் தமிழ்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார்பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாநகரசபை தமிழ் காங்கிரஸ் குழுத்தலைவர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் தலைமையில் நடந்த கருத்தரங்கில் "தலைவர்களும் தமிழர்களும்" என்ற பொருள் பற்றி பேசிய திரு குமார்பொன்னம்பலம் மேலும் கூறியதாவது உலகிலுள்ள எந்த நாடாவது சிங்கள அரசாங்கத்திடம் தமிழ் மக்களுக்கு தமிழ் ஈழத்தை பிரித்துக் கொடுத்து விடுமாறு சொல்லப்போவதில்லை. உலகில் எந்தநாடாவது தமிழ் ஈழத்தை இன்றுவரை ஆதரித்ததில்லை. மசாக்சுசெட்ஸ் மாகாண தீர்மானத்தில் கூட தமிழ் ஈழம்பற்றி ஒரு வார்த்தை கூறப்படவில்லை; ஈழத்தமிழ்மக்களின் பிரச்னைகளை தீர்த்து வைக்குமாறு இலங்கை அரசை கோருவது தான் அத்தீர்மானமாகும்.

### மரம்பழுத்தால் வௌவால் வரும்

தேர்தல் காலத்தில் கூட்டணியின் 2-வது இளைஞர் அணி அடுக்கு மொழியில் பேசினார்கள் மரம் பழுத்தால் வௌவால் வரும் ஆதரவுதர அந்நாடுகள் இருப்பதாகக் கூறினார்கள் மக்களும் நம்பினார்கள் வாக்களித்தார்கள் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. சிலமாதங்களுக்குள் இனக்கலவரம் வந்து தமிழர்கள் கொல்லப்பட்டபோது ஒருநாடாவது உதவிக்கு வரவில்லை. ஆயுதம் வரும் என்று மேடைகளில் கூறியவர்களையே காண முடியாமல் போய்விட்டது தமிழினம் நம்பி ஏமாந்தது.

### கூட்டணியிடம் திட்டமில்லை

கூட்டணியிடம் திட்டமில்லை அதனால் எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள் கூட்டணியின் 2-வது இளைஞர் அணியிடமும் திட்டமில்லை அதனால் தான் அவர்கள் தலைவர்களை தட்டிக் கேட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் திட்டமிருந்தால் 2-வது இளைஞர் அணியே அத்திட்டத்தை அமுலாக்கியிருப்பார்கள்.

கொள்கை இருந்தால் போதாது அதனை நிறைவேற்றத் திட்டம் இருக்க வேண்டும். கொள்கைக்கும் திட்டத்திற்கும் வெகு தூரம் கொள்கை உன்னத லட்சியமாக இருக்கலாம். அதை நிறைவேற்ற மனத்தைரியம் திட்டம் இருக்க வேண்டும் அப்படியானால் தான் லட்சியத்தை நிறைவேற்றலாம்.

லட்சியத்தை மட்டும் முன்வைத்து திட்டமில்லாமல் கூட்டணி செயலாற்றியபடியால் தான் இன்று கூட்டணிக்குள் உள்போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. சமாதானம் ஏற்படுத்த புதிய தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள் இது உள்வீட்டு விஷயமில்லை பகிரங்கமாக சந்திக்கு வந்து விட்டது. அதனால் தான் மக்களுக்கு தெளிவுபடுத்துகிறோம்.



### திட்டமில்லாத தலைவர்கள்

தமிழினம் திட்டமில்லாத தலைவர்களை அகற்றிவிட்டு ஏன் செயல்பட முடியாது?

### கடந்த வருட காலத்தில்

போராட்டம் மூலம் தமிழ் ஈழம் பெறுவோம் என்றவர்கள் இன்று திருக்குறள் மூலம் தமிழ் ஈழம் காண்போம் என்கிறார்கள். கடந்த வருட காலம் கூட்டணியினர் என்ன போராட்டம் நடத்தியுள்ளார்கள்? எந்த விதத்தில் போராடியுள்ளார்கள்

போராட்டத்தில் உரிமை உண்டு. ஒன்று அகிம்சை போராட்டம். மற்றது ஆயுதப் போராட்டம் அகிம்சை என்பது, பேச்சு வார்த்தை, ஒப்பந்தம், நல்லெண்ணத்தை உருவாக்கி காரியத்தை சாதிப்பது போன்றது. இந்த அகிம்சை முறை மூலம், தமிழ் ஈழம் கிடைக்க போவதில்லை. அதற்கு சிங்களவர் சம்மதிக்க மாட்டார்கள் ஆதலால் ஆயுதப் போராட்டம்தான் வழி. அதற்கு சிங்களவர் சம்மதம் நமக்கு தேவையில்லை. தமிழ் மக்கள் தீர்மானித்தால் போதும்.

சிங்கள சமுதாயம் இலங்கையில் மட்டும்தான் வாழ்கிறது. உலகில் வேறு எந்த நாட்டிலும் சிங்களவர் இல்லை. அவர்களுடைய சரித்திரம் குறுகிய கால சரித்திரம். தமிழரின் சரித்திரம், நீண்ட கால சரித்திரம் தமிழ் மக்கள் இலங்கையில் மட்டும் மல்ல, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தென் அமெரிக்கா, மொரீயஸ், லண்டன் மற்றும் பல நாடுகளில் வாழ்கிறார்கள் அந்தந்த நாடுகளில் தமிழன் கலை, கலாச்சாரம் வளர்கிறது. இவற்றை சிங்கள மக்கள் சிந்திக்காமலிருக்கவில்லை. தமிழ்ஈழம் வந்தால் தங்கள் நிலைமை எப்படியிருக்கும் என்பதும் சிங்கள மக்களுக்கு தெரியாமலில்லை. தமிழ் ஈழத்திற்கு சமீபத்தில், தமிழ் நாட்டில் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்றோ ஒரு நாளில், இரு நாட்டு தமிழரும் சேர்ந்து, சிங்கள ஸ்ரீலங்காவை பிடித்துடுவார்கள் என்ற அச்சம் சிங்கள மக்களிடம் இல்லாமலில்லை. இந்நிலையில் பேச்சு வார்த்தை ஒப்பந்தம், மூலம் சிங்கள மக்கள், தமிழ்ஈழத்தை தரப்போவதில்லை அகிம்சை வழிகள் மூலம், எமக்கு சுதந்திரம் கிடைக்கப் போவதில்லை. ஆயுதப் போராட்டம் தன் ஒரே வழி.

### முதன் முதலில் கூறியவர்கள்

ஆயுதப் போராட்டம் மூலம் தான் தமிழ் ஈழம்பெற முடியும் என்று முதல் முதலில் கூறியவர்கள் நாங்கள் தான் இன்று கூட்டணியிலிருந்த மாவை சேனாதிராசா கூட ஆயுதப் போராட்டத்தின் மூலம் தான் தமிழ் ஈழம் பெறலாம் என்று கூறியிருக்கிறார்.

### எம். பிக்களுக்குத் தெரியும்

ஆயுதப்போராட்டம் மூலம் தான் தமிழ் ஈழம் பெறலாம் என்பது கூட்டணி எம் பிக்களுக்கும் தெரியும். ஆனால் கடந்த காலத்திலும் எதிர்காலத்திலும் ஆயுதப் போராட்டத்திற்கு அவர்கள் தயாராக இல்லை அதனால்தான் மக்களிடம் இதனைக் கூறவில்லை.

### தமிழினம் தயாரா?

தமிழ்காங்கிரஸ் ஆயுதம் தாங்குவார்களா? என்று கேட்கிறார்கள் அதுவல்ல கேள்வி. ஆயுதப் போராட்டத்திற்கு தமிழினம் தயாரா என்பதை அறிய வேண்டும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் வீட்டுக்குவீடு அல்லது சென்று புள்ளிவிபரங்கள் முலம் மக்கள் கருத்தை அறியவேண்டும். தமிழினம் ஏதோபித்து முடிவு எடுத்தால் அதற்கான திட்டங்களை தயாரித்து செயல்படவேண்டும். தமிழினமே படைகளாக முன் செல்லும். ஒன்று தமிழ் ஈழம் மலரும் அல்லது வருந்தரமாகும்.

இன்றுள்ள தலைவர்கள் மக்களை வழி நடத்தி ஆயுதப் போராட்டம் நடத்த தயாராக இல்லை. பாராளுமன்ற ஆசனங்களில் மட்டும்தான் அவர்களுக்கு கண்ணாக இருக்கிறது ஆதலால் இப்படியான தலைவர்களை தமிழினம் நிராகரிக்கவேண்டும்.

### தமிழ் ஈழம் ஒன்றே குறிக்கோள்

5000 பேர் செல்லும் ஊர்வலத்தில் 4 பேர் ஒளிந்து நின்று கல் வீச, 4000 பேர் ஓடிவிடும் நிலைமையில் போராட முடியாது. எத்தனை எதிர்ப்பு வந்தாலும் இறுதி வரை போராடும் தைரியம் தமிழினத்திற்கு ஏற்படவேண்டும். ஆயுதப்போராட்டம் என்றால் பிணங்களை, இரத்த ஆறுகளை, பொருள் அழிவுகளை

(7-ம் பக்கம் பார்க்க)

### மக்கள் கருத்து

## அறிந்த பின்னரே அறிக்கை விடுக

தமிழ்மறவர் கழகத்தினருக்குப் பதிலளிக்குமுகமாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் 30-5-80ல் வெளியான 'ஈழநாடு' இதழில் வெளியிட்டிருந்த அறிக்கை கரம்பன் கிராமத்து இந்துக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது.

கரம்பன் சிவன் கோவில் சகல மக்களினதும் வழிபாட்டுக்காகத் திறந்துவிடப்பட்டிருக்கின்றதா? என்றுஅவர்கள் வினவியிருப்பது இங்கு வாழும் இந்துக்களுக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ள அதே வேளையில் இங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் என்று அவர்கள் கருதும் சமூகத்தினர் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே அதாவது வடபகுதியில் இப்படியான கோஷங்கள் கிளப்பப்படுவதற்கு முன்னரே இக்கோவில் சகல மக்களினதும் சமத்துவ வழிபாட்டிற்காக திறந்துவிடப்பட்டுவிட்டது. ஆலய ஸ்தாபகரான அமரர் சிவஸ்ரீ கணபதி ஐயர் அவர்கள் இந்தப் பணியைச் செய்துமுடித்துவிட்டார்.

இதனை அறியாத வெகுஜன இயக்கத்தினர் பொறுப்பற்ற விதத்தில் அறிக்கை விடுப்பது மிகவும் வேதனைக்குரியது. பல வருடங்களுக்கு முன்னரே தமது ஆலயத்தை சகலருக்குமாக திறந்துவிட்டு துணிந்து செயற்பட்ட அமரர் கணபதி ஐயரின் நடவடிக்கையை இந்த அறிக்கை கேலிக்குரியதாக்குகிறது என்பதாலேயே இதனை இங்கு சுட்டிக்காட்டுகிறேன். இனியாவது இயக்கத்தினர் அறிக்கைகளை விடும்போது தீர விசாரித்து செயற்படுவார்களாக.

தென் கரம்பனூரான்.

## எம். ஜி. ஆர். வெற்றி

இரகுநாதையர் பஞ்சாங்க வெளியீடான 'சோதிடபரிபாலினி' மாசி இதழில் வேலணை கிழக்கைச் சேர்ந்த சோதிடர் ஆ. சிவராசா எழுதிய கட்டுரையொன்றில், 17-5-80ன் பின்னர் தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற்றால் தற்போதைய முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமது ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்..." என்று குறிப்பிட்டுள்ளார்.

1980ம் ஆண்டின் உலகப் போக்கு எப்படி இருக்கும் என்ற கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், துலா ராசிக்காரரான எம். ஜி. ஆருக்கு 17-5-80ல் நிகழவிருக்கும் ராகு-கேது மாற்றம் நன்மையாக இருக்குமென்றும் அதில் தெரிவித்துள்ளார்.

சோதிடர் சிவராசா குறிப்பிட்டபடி எம். ஜீ. ஆர். தலைமையிலான அ. தி. மு. க. அமோக வெற்றியீட்டிப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏ. வி. எம்.

## இன்று கலைஞர் மு. க. பிறந்தநாள்

# தோல்வியில்கலங்காதவனே உண்மையான தலைவன்

மாணவர்கள் என்னை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டாம். நான் ஒரு விதிவிலக்கு விதிவிலக்குகள் வழிகாட்டிகளாகமாட்டா!'' என்று கலைஞர் மு. க. அவர்கள் அடிக்கடி இளம் மாணவர் சமுதாயத்தினருக்கு அறிவுரை கூறுவது வழக்கம். அவர் அப்படிக் கூறினாலும், மற்றவர்கள் அவரைப்பார்த்து பின்பற்றுமளவுக்கு ஒரு சிறப்பான வாழ்க்கையையே அவர் வாழ்ந்து காட்டினார், வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

- ம. சு. சாம்பசிவம் --

(தலைவர், கலைஞர் கருணாநிதி பொதுப்பணிமன்றம்)

திரு. மு. க. பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலம் நீதிக்குக் குரல் கொடுத்து முழக்கமிட்டோரின் பேச்சுக்கள் அவரை நாட்டுணர்ச்சியும் மொழியுணர்ச்சியும் மிக்கவராக்கியது. அறிவாளிகளின் ஆணித்தரமான பேச்சுக்கள் இளவயதிலேயே மு. க. வின் உள்ளத்தில் பெரும் புரட்சி உணர்வைத் தோற்றுவித்து நாட்டு நலத்தில் நாட்டம் கொள்ளச்செய்து ... மொழியுணர்வும் ... திரும் ... கொண்ட கலைஞர் மு. க. அது முதல் நீதிக்கட்சியின் தத்துவங்களைப் பயின்று ஆராயத் தொடங்கினார் நீதிக்கட்சி தத்துவங்கள் உயர்ந்தவை என அறிந்தார். அதுமுதல் அவருக்குப் படிப்பிலிருந்தவனமெல்லாம் அரசியலில் செயல்படலாயிற்று.



(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எமது நாடகங்களை ஈழத்து மக்கள் வெகுவாக ரசிக்கின்றனர்"

## மேஜர் சுந்தரராஜன் பேட்டி

தமிழ்த் திரையுலகின் பிரபலகுணசித்திர நடிகரான மேஜர் சுந்தரராஜன், தமது என்னெஸ்ஸென நாடகக் குழுவுடன் இலங்கைக்கு வந்து கொழும்பில் சில நாடகங்களை மேடையேற்றிப் பாராட்டுப் பெற்றுக்கொண்டு, யாழ்ப்பாணம் வந்து சில நாடகங்களை மேடையேற்றி வருகிறார். இதுவரை மூன்று நாடகங்கள் யாழ் நகரில் மேடையேறிவிட்டன. இன்று 'கல்தூண்' என்ற நாடகம் மேடையேறுகிறது. இந்த நாடகம் தமிழகத்தில் பாராட்டும், பரிசும் பெற்ற நாடகம். திரைப்படங்கள் போல் காட்சி மாற்றங்களும், ஆடை அலங்காரங்களும் கொண்ட வரது நாடகங்கள் யாழ். நகரிலும் பாராட்டைப் பெற்று வருகின்றன. மேஜர் என்ற பெயருக்கேற்ப கம்பீரத் தோற்றமும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையையும் கொண்ட மேஜர் சுந்தரராஜனை, ஈழத்தின் ஒரு திரைப்பட நடிகரும், தயாரிப்பாளராகவுமுள்ள டாக்டர் க. இந்திரகுமாரை பேட்டி காணச் சொன்னோம். அந்தப் பேட்டியின் ஒரு பகுதி இன்று இங்கு தரப்படுகிறது.

(ஆ-ர்.)

டாக்டர்: சென்னை என்னெஸ்ஸென் குழுவினருடன் இலங்கை வந்த நோக்கத்தைக் கூறுவீர்களா?

மேஜர்: கொழும்பு கொம்பனித்தெருவில் இருக்கும் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில் கோபுரத்தை அமைப்பதற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு, நாடகங்களை நடத்தும்படி அவ்வாலயத் தர்மகர்த்தாக்கள் எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதன் நிமித்தம் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்.

டாக்டர்: இம்முறை நீங்கள் இங்கு அரங்கேற்றவிருக்கும் நாடகங்கள் எவை? அவற்றைப் பற்றிக் கூறுங்கள்?

மேஜர்: ஞானஒளி, அவன் பார்த்துப்பான், ஜூலியஸ் சேகர், டில்லி மாமியார் போன்ற நாடகங்களை அரங்கேற்றியுள்ளோம். 200 தடவைகளுக்கு மேல் நடிக்கப்பட்டது ஞானஒளி நாடகம். "அவன் பார்த்துப்பான்" நாடகத்தை மக்கள் வெகுவாக ரசித்தார்கள். அதைப் பற்றி எனக்கு ஒரு பயமிருந்தது' உள்ளூரில் மக்கள் அதை எப்படி ரசிப்பார்களென்று. ஆனால் இங்கு அதற்குப் பெரும் வரவேற்புக் கிடைத்திருக்கிறது. யாழ்ப்பாணத்திலும்சரி, கொழும்பிலும்சரி எங்கள் நாடகங்களை மக்கள் வெகுவாக ரசிக்கிறார்கள்.

டாக்டர்: நீங்கள் கூறிய இந்த நாடகங்கள் யாவும் தமிழகத்தில் பலமுறை மேடையேற்றப்பட்ட நாடகங்களாயிருக்குமென நம்புகிறேன். அப்படித்தானே?

மேஜர்: நிச்சயமாக, ஞானஒளி 205 தடவைக்கு மேல் நடிக்கப்பட்டுவிட்டது. கல்தூண் 150 தடவைக்கு மேல் மேடையேறியுள்ளது. ஜூலியஸ் சேகர் 60 தடவைகளுக்கு மேல் நடிக்கப்பட்டது. டில்லி மாமியாரும் பல தடவை மேடையேறியுள்ளது.

டாக்டர்: உங்கள் நாடகக் குழுவின் வரலாற்றைப் பற்றிக் கூறுவீர்களா?

மேஜர்: இந்நாடகக் குழு 1962ல் அல்லது 1963ல்தான் ஆரம்பிக்கப்பட்டது. என். எஸ். நடராஜன் என்ற சாம்பு நடராஜன் தான் இக்குழுவை ஆரம்பித்தார். இவர் அக்காலத்தில் பிரபல அமெச்சூர் நடிகராக விளங்கினார். இவருடைய பெயரில்தான் இந்நாடகக்குழு என்னெஸ்ஸென் குழுவென இயங்கிவருகிறது. ஆரம்பத்தில் டெலிபோன் இலாகாவில் கடமையாற்றிய நான் நாடகத்தின் மேலிருந்த ஆர்வத்தின் காரணமாக இக்குழுவில் நடிகனாகச் சேர்ந்து கொண்டேன்.

பணம் சம்பாதிப்பது என்பது எமது நாடகக் குழுவின் நோக்கமல்ல. சிறந்த நாடகங்களை ரசிகர்களுக்கு அளிப்பதே எமது நாடகக் குழுவின் பிரதான நோக்கமாகும். இதில் நடிகர்களாக இருப்பவர்கள் எல்லோரும் உத்தியோகம் பார்ப்பவர்கள்.

டாக்டர்:- எவ்வளவு கலைஞர்கள் உங்கள் நாடகக் குழுவில் இருக்கிறார்கள்.

மேஜர்:-ஐம்பது பேர் என்று சொல்லலாம்.

டாக்டர்:- அதில் தொழில் நுட்ப வாத்திய, இசைக்கலைஞர்கள் யாவரும் அடங்குவார்களா?

மேஜர்:- ஆம். தொழில் நுட்ப, மேக்கப், இசை, பக்க வாத்திய கலைஞர்கள் எல்லாரும் சேர்ந்து தான் ஐம்பது பேர் இடம்பெற்றுள்ளனர்.

டாக்டர்:- உங்களுடைய என்னெஸ்ஸென் நாடகக் குழு எத்தனை நாடகங்களை தயாரித்து, எத்தனை தடவை மேடையேற்றியுள்ளது?

மேஜர்:-எமது நாடகக் குழு 30 நாடகங்களை தயாரித்து 1800 தடவை மேடையேற்றியுள்ளது.

டாக்டர்:-ஒரு நாடகத்திற்குரிய பிரதியை எவ்வாறு தெரிந்தெடுக்கிறீர்கள்?

மேஜர்:-கதாசிரியர்கள் எழுதிக் கொடுக்கும் நாடகங்களை நான் பல முறை படித்துப் பார்ப்பேன். அதில் ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டியிருந்தால் கதாசிரியர்களை அதனை ஐந்து அல்லது ஆறு தடவை திருப்பி எழுதும்படி பணிப்போம்.

அதன்பின் அந் நாடகத்தைப் பற்றி எமது நாடகக் குழுவினர் சம்பாஷணை நடாத்தி பலமுறை நடித்துப் பார்த்த பின்னரே அந்நாடகம் மேடையேற்றுவதற்கு உகந்ததா என்பதை தீர்மானிப்போம். அப்படி சலிக்காமல் எழுதிக் கொடுத்த பல நாடகங்களை இப்பொழுது நாங்கள் மேடையேற்றும் நாடகங்கள். நாடகங்கள் எழுதப்பட்ட பின் அவற்றை நடிகர்கள் எல்லோரும் அவரவர்க்குரிய பாத்திரங்களை வேகமாகப் படிப்போம். அப்படிப் படிக்கும்பொழுது அவற்றில் சிலமாற்றங்களையும் மேற்கொள்வோம். அதன் பின்பே நாடகங்களை மேடையேற்றுவோம்.

டாக்டர்:- நீங்கள் சரித்திர நாடகங்களை விரும்புகின்றீர்களா அல்லது சமூக நாடகங்களை விரும்புகின்றீர்களா?

மேஜர்:-ஆரம்பத்தில் சரித்திர நாடகங்களை மேடையேற்றினோம். தற்பொழுது நேரமின்மையால் சரித்திர நாடகங்களை கைவிட்டு, சமூக நாடகங்களை தான் பெருமளவில் மேடையேற்றி வருகிறோம்.

### தமிழருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி நிர்வாகம், நீதி நிர்வாகம் போன்றவை மாவட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டுவரப்பட மாட்டாது. அவை யாவும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ்த் தான் இருக்கும். முக்கிய பொறுப்புக்களற்ற மாவட்ட அபிவிருத்திச் சபையைப் பெறுவதால் தமிழ்மக்கள் எந்தவிதமான நன்மையையும் அடையமுடியாது.

"மாவட்ட அபிவிருத்திச் சபை கொண்டுவரப்பட்டால் அதன் சிங்கள அரசாங்க அதிபரும், சிங்களப் பாதுகாப்புப் படையினருந்தான் தமிழ்ப் பகுதியை ஆட்சிசெய்யப்போகிறார்கள். அப்படிப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையைத் தமிழ்மக்களுக்கு வழங்குவதைவிட தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதையே இட துசாரிகளான நாம் விரும்புகின்றோம்.

"இன்றைய ஆட்சியாளர் மத்தியில் ஒற்றுமையில்லை. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு திசையில் செல்கிறார்கள். ஜனாதிபதி, விரும்பி மாவட்ட அபிவிருத்திச் சபையைத் தமிழ்மக்களுக்கு வழங்க முன்வந்தாலும் அதைத் தடுப்பதற்குச் சிறில் மத்யூ போன்ற பல வகுப்புவாதிகள் விடமாட்டார்கள். தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடுவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் அந்த வகுப்புவாதிகளுக்குத் தகுந்த பாடத்தைப் படிப்பிக்க நாம் தயங்கமாட்டோம்.

இன்றைய அரசு உலக வங்கியையும், ஏகாதிபத்திய நாடுகளையும் நம்பித்தான் ஆட்சியை நடத்தி வருகிறது. நிதி அமைச்சர் இந்த நாட்டின் ஆட்சித்திறத்தை நிலைநிறுத்துவதற்காக உலக வங்கியிடமும், ஏகாதிபத்திய நாடுகளிடமும் சென்று 400 கோடி ரூபாவைப் பெற்று வந்துள்ளார்.

உலகச் சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளது. இதனால் அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசு வங்குரோத்து நிலையில் உள்ளது. தாம்பெற்ற கடனைச் சமாளிப்பதற்காக ஏழைமக்களின் அத்தியாவசியப் பொருட்களான சீனியின் விலையைக்கூட கூட்டியிருக்கிறது. உலக நாடுகளில் இலங்கையில் தான் பொருட்களின் விலை மிகக் குறைவு எனக் கூறிவருகிறது.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கும், தொழிலாள விரோத நடவடிக்கைகளுக்கும், கடந்த 80 வருடங்களுக்குமுன் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடி உயிர் நீத்த தியாகிகளான கந்தசாமி, கோவிந்தன் ஆகியோரை நினைவு கூரும் முகமாகவும் நாகலிங்கம், சாமி உயிர் நீத்த ஜூன் 5ம் திகதியை தேசிய எதிர்ப்பு தினமாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளோம். அதையும் குண்டர்களை வைத்தும், படையினரை ஏவிவிட்டும் முறியடிக்க ஆட்சியாளர்கள் திட்டம் தீட்டிவருகின்றனர். (கொ)

### ஆட்சிக்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இவை விடு.

வெங்காயம்

மிளகாய்

"இதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் வெங்காயம், மிளகாய், அரிசி போன்றவற்றை தன்னிறைவு ஏற்படுத்துவதிலும் அபிவிருத்திகளை ஏற்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தியது. இதனால் தான் வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதை அன்றைய அரசு தடை செய்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்தது.

### தமிழ் மக்களுக்கு சோதனை மிகுந்த காலம்

தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் இன்று சோதனை மிகுந்த காலமாகும். அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பது தெரியாது தமிழ் இனம் தடுமாறிக்கொண்டு இருக்கின்றது. யு. என். பீ., சுதந்திரக்கட்சிகளை நம்பிய தமிழ்மக்கள் தமது பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை என்பதை உணருகின்றனர். தாங்கள் வித்தியாசமான பாதையில் செல்லவேண்டும் என்று சிந்திக்கிறார்கள்.

"தமிழ் மக்கள் இரு பொதுத் தேர்தல்களில் தமது தனிவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பைத் தமிழ்த் தலைவர்களிடம் ஒப்படைத்திருந்தனர். தம்மை ஐக்கியமாக அணுப்புங்கள் என்ற கோஷத்தை முன்வைத்துப் பாராளுமன்றம் சென்ற கூட்டணியினர் ஐக்கியம் இன்று சிதறத் தொடங்கியுள்ளது. திரு. தொண்டமான், திரு இராசதுரை ஆகியோர் கூட்டணியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்துள்ளார்கள்.

"ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அமரர் ஜி ஜி. பொன்னம்பலம் சமத்துவ பிரதிநிதித்துவத்தைக்கோரி வரலாம் என்று சிந்தித்தார். முடிவில் அவர் தனது திட்டத்தில் தோல்வி கண்டு யு என் பி.யுடன் சேர்ந்தார். இதே போல் தான் தமிழரசுக் கட்சியும் டட்லி அரசாங்கத்துடன் சேர்ந்து பின்னர் வெளியேறியது. அதன்பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது.

முதலாளித்துவ நாடுகளிலேயே இனப் பிரச்சனைகள் உள்ளன. சோஷலிஷ அமைப்பின் மூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் இதை சோவியத் யூனியன் செயல் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்துவிட்டமையால் இது பற்றி இட்டோது திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை

அவ்விரு விமான எரிப்பு வழக்கு மாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதபரசர் திரு சிவா செல்லையா முன்னிலையில் நடைபெற்றபோது சாட்சியமளித்த விமானி மேற் கண்டவாறு கூறினார்.

ஜூரர்கள் இல்லாது நடைபெற்ற இவ்வழக்கில் குறிப்பிட்ட விமானத்தை செலுத்திய விமானி திரு ஏ. எல். காமர் சாட்சியமளித்தார். அவரது சாட்சியத்தை அரச சட்டத்தரணி திரு. திலக் மாரபன நெறிப்படுத்தினார்.

திரு காமர் சாட்சியமளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது!

78ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதி காலை 6மணிக்கு அவ்விரு விமானத்தை இரத்மலானையிலிருந்து பலாலிக்கு ஓட்டிச் சென்றேன் பின் காலை 7.30 மணிக்கு பலாலியிலிருந்து இரத்மலானைக்கு ஓட்டி வந்தேன். விமானம் காலை 8-30 மணிக்கு இரத்-

### விமானத்தில்...

மலானையை அடைந்தது. மேற்படி விமானத்தில் 44 பிரயாணிகள் பயணம் செய்தனர், வழக்கம்போல் பத்திரங்களில் கையொப்பமிட்டுவிட்டு கமினில் இருந்து புறப்பட்டு பிரயாணிகள் இறங்க படிகள் வந்து பிரயாணிகள் அறையின் கூரையில் தட்டிக் கொண்டிருந்த எனது தொப்பியை எடுத்தேன். அப்போது அநேகமாக சகல பிரயாணிகளும் இறங்கி விட்டனர் ஒரு பெண் குழந்தையுடன் பின்பக்க வாசலால் இறங்கிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் இரண்டாவது மூன்றாவது ஆசனங்களுக்கிடையில் இருவர் குனிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்கள் தமது பெட்டியை எடுப்பதாக எண்ணி நான் இறங்கிவிட்டேன்

அவ்விரு விமானத்தை மாலைதீவுக்கு கொண்டுசெல்வதற்காக வேறு விமானிகள் விமானத்தை ஆடுநாயக்காவிற்கு ஓட்டிச்செல்வதற்காக சென்றனர் அப்போது வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. விமானத்தின் கீழ்ப் பகுதியில் பெரும் தீயும், மேல்பகுதியில் புகைமண்டலமாகவும் காட்சியளித்தது.

விமானத்தை நோக்கிச் சென்ற விமானிகள் இருவர் திரும்பி வந்தனர். அவர்களிடம் விமானத்தில் ஏதாவது இயந்திரக்கோளாறு உண்டாவெனக் கேட்டேன். அவர்கள் ஏதோ வெடித்ததாகக் கூறினார்கள்

60 லட்சம் ரூபா பெறுமதியான விமானம் முற்றாக எரிந்துவிட்டதால் இப்போது திருத்தப்பட முடியாதநிலையில் இருக்கிறது.

சட்டத்தரணி திரு. சிவசிதம்பரம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணிகள் திரு. எம். சிவசிதம்பரம், திரு. எஸ் நடராசதிலகம், திரு. உருத்திரமூர்த்தி ஆகியோர் எதிரிகள் சார்பில் ஆஜராகினர்.

### உற்சவம்

(உடுப்பிட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகின்றது.

### வீதிக்கு 3 லட்சம் ஒதுக்கீடு

(பச்சிலைப்பள்ளி)

ஆழியவளை வெற்றிலைக்கேணி வீதி அமைப்பதற்கு இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மூன்று லட்சம் ரூபாவை பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு க. துரைரத்தினம் ஒதுக்கியுள்ளார்.

இவ் வீதி அமைக்கப்படும் பட்சத்தில் முள்ளியான்வரை பஸ் சேவையை நீடிக்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கும் 'இந்திரா' அலை; தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர்.

## கருணாநிதி - குமரிஅனந்தன் வெற்றி

புதுடில்லி, ஜூன் 2 இந்தியாவின் ஒன் து மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் கட்சி நாலு மாநிலங்களில் வெற்றியீட்டியுள்ளது. குஜராத், ஒரிசா, ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்களிலும் திருமதி காந்தியின் கட்சி வெற்றி பெற்றுள்ளது

மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம் பீகார் ஆகிய மாநிலங்களில் திருமதி காந்தியின் கட்சி முன்னணியில் நிற்கின்றது.

### தமிழ்நாட்டில் அ. தி. மு. க.

தமிழ்நாட்டில் அமோகமாக அ தி மு க கூட்டணி வெற்றி பெற்று அதிகாரத்திற்கு வந்துள்ளது.

தமிழ்நாடு சென்ற சட்டமன்றத் தேர்தலில் 126 ஸ்தானங்களைப் பெற்ற அ தி மு க கட்சி, இம்முறை நடைபெற்ற தேர்தலில் 129 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது

### தி. மு. க. தோல்வி

கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் 48 ஸ்தானங்களைப் பெற்ற தி மு க கட்சிக்கு, இம்முறை 38 ஸ்தானங்களே கிடைத்துள்ளது.

### கம்யூனிஸ்ட் வெற்றி

கடந்த தேர்தலில் பெற்ற ஸ்தானங்களையும் விட பெருமளவு கூடுதலான ஸ்தானங்களை இம்முறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியும் பெற்றுள்ளன

தமிழ்நாட்டில் சென்றமுறை 27 ஸ்தானங்களைப்பெற்ற இந்திரா காங்கிரஸ் இம்முறை 30 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது.

### 3 பெண்கள் வெற்றி

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 16 பெண்களில் மூவர் வெற்றி பெற்றுள்ளனர். இம்மூவரில் அ தி மு க வைச் சேர்ந்தவர்கள் இருவர்.

### கருணாநிதி வெற்றி

சென்னை அண்ணா நகர் தொகுதியில் அ தி மு க வேட்பாளர் டாக்டர் எச் வி ஹண்டேயை எதிர்த்துப் போட்டியிட்ட தி மு க தலைவர் திரு மு கருணாநிதி வெற்றி பெற்றுள்ளார்.

### முனு ஆதி தோல்வி

கலைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகராகவிருந்த திரு. முனு ஆதி, தி மு க வேட்பாளரிடம் தோல்வியடைந்தார்.

### குமரி அனந்தன் வெற்றி

திருவொற்றியூர்த் தொகுதியில் போட்டியிட்ட தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திருமதி குமரி அனந்தன் வெற்றி பெற்றுள்ளார் (வெ)

# இந்திராவின்சட்டசபைகலைப்பு அநீதிக்கு தமிழகத்தில்பாடம்

## -- 'அர்ஸ்' எம். ஜி. ஆருக்குவாழ்த்து

(சென்னை)

தமிழக சட்டமன்றத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை பெற்ற அ தி மு க தலைவர் திரு எம். ஜி. இராமச்சந்திரனை முன்னாள் கர்நாடக முதலமைச்சரும், அர்ஸ் காங்கிரஸ் தலைவருமான திரு. தேவராஜ் அர்ஸ் பாராட்டியுள்ளார்.

அவர் தனது பாராட்டுச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது; தி. மு க. -இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பின் மத்தியின் தமிழகத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

# "தமிழகத்தில் ஜனநாயகப் பண்புகள் அழியவில்லை"

## எம். ஜி. ஆர். வெற்றிப் பெருமிதம்

(சென்னை)

தமிழ்நாட்டின் சுபீட்சத்திற்கும், ஏழை மக்களின் நல்வாழ்விற்காவும் அ தி மு க பாடுபடும். அறிஞர்களின் ஒத்துழைப்புடன் பல நல்வாழ்வுத் திட்டங்கள் தமிழகத்தில் மேற்கொள்ளப்படும்.



மேற்கண்டவாறு தமிழக சட்டமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை வெற்ற அ தி மு க கட்சியின் தலைவரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான திரு எம். ஜி. இராமச்சந்திரன் வெளியிட்ட செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அச் செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது; அண்ணாதுரை போன்ற தமிழக தலைவர்களின் லட்சியங்கள் அழிந்துவிடவில்லை. அவ் இலட்சியங்களுக்கும் ஜனநாயக பண்புகளுக்கும் மக்கள் தொடர்ந்து ஆதரவளித்துள்ளமையையே தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

எனது கட்சிக்கும், தோழமைக் கட்சிகளுக்கும் வாக்களித்த தமிழக மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (வெ)

# இந்திராவின் சமரசமுயற்சியை அஸாம் மாணவர் ஏற்கமறுப்பு!

## தொடர்ந்து போராடுவார்களாம்

புதுடில்லி, ஜூன் 2 இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் சட்ட விரோதமாக குடியேறியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான அஸாம்மாணவர்களின் கிளர்ச்சியை தீர்க்க பிரதமர் இந்திரா காந்தி மேற்கொண்ட முயற்சியைமாணவர்கள் நிராகரித்தனர்.

பிரதமர் இந்திரா ஆறு எதிர்க்கட்சிகளுடன் கூட்டாக விடுத்த சமரச வேண்டுகோளை அசாம் மாணவர்கள் நிராகரித்ததுடன், இந்திரா காந்தியின் ஏமாற்று முயற்சிக்கு எதிர்க்கட்சிகள் பலியாகிவருவதையும் கண்டித்தனர். எதிர்ப்பு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதென்ற பேச்சுக்கே இடமில்லையென்றும், தொடர்ந்து போராடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இக்கிளர்ச்சியின் போது பல பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது (வெ)

### மின் விநியோகம்

[சுழிபுரம்]

பண்ணை முதலாவது குறுக்கு ஒழுங்கை மின்விநியோகத்தை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஆரம்பித்து வைத்தார்.

# "உயர் அதிகாரியை அனுப்பி பிரச்சினையைத் தீருங்கள்"

## கல்வி அமைச்சருக்கு குமார் தந்தி

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் பிரச்சனை பற்றி விசாரணை செய்ய உயர் அதிகாரிகளை அனுப்புங்கள்; இதனைத் தவிர்க்க வேறு மார்க்கம் இல்லை நிலைமை மோசமாகியுள்ளது."

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவுக்குத் தமிழ்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அனுப்பியுள்ள தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாணவர் குழுத்தலைவர்கள் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைச் சந்தித்ததை தொடர்ந்தே அவர் இத் தந்தியை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ்க் காங்கிரஸ் காரியாலயத்தில் மத்திய கல்லூரி மாணவர் குழுத் தலைவர்கள் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைச் சந்தித்துத் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்தனர்.

மத்திய கல்லூரி அதிபரை இடமாற்றம் செய்வதன் மூலமே இப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றும்' அதுவரை பகிஷ்கரிப்பு நடைபெறுமென்றும், மாணவர் குழுத்தலைவர்கள் தெரிவித்தனர். (ஈ)

### பூதராசி அம்மன் உற்சவம்

[சுழிபுரம்]

தொல்புரம் கிழக்கு பூதராசியம்மன் கோவில் அலங்கார உற்சவம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று பத்தாவது தினம் சங்காபிஷேகம் நடைபெறும். அன்று விசேட மேளக்கச்சேரி இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறவும் அன்னதானம் நடைபெறவும் ஏற்பாடாகவுள்ளது.


வல்லதே வாழும்!

வல்லவன் வாழ்வான் என்பது பழமொழி. பயிர் பச்சை, செடி, கொடிகளிலும் அப்படித் தான். வல்லதே வாழும். பயிர்; உங்கள் பயிர்களைச் செழிக்கச் செய்தாலும், தேவையற்ற களைகள், புதர்ச் செடிகளும் அவற்றின் சாரத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும். சிறப்பான களைக் கட்டுப்பாடு இதனால் தான் அவசியமாகிறது. விளைச்சலைக் கூட்டி இலாபத்தை பெருக்க. இது மிக முக்கியம்.

ஹெடோனல் எம் 60%

60% எம். சி. பீ ஏ. அமீன் உப்புகள் கொண்டது.

அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் அது அறவே அழிக்கும்.

ஹெடோனல் எம் 60% நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகள், புதர்ச் செடிகள், மிகச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் கட்டுப்படுத்தும் தரமான களைநாசினி. அது உங்கள் நெற் பயிரைப் பாதுகாப்பதுடன் இலாபத்தையும் பெருக்குவது நிச்சயம்.




BAYER

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளின் தயாரிப்பாளர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி : 93563, 96331-6

100 மில்லி லீட்டர் ரூபா 10/- 200 மில்லி லீட்டர் ரூபா 17/50

450 மில்லி லீட்டர் ரூபா 36 50- 2 லீட்டர் ரூபா 145/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஹரன் சாதிமனை
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-பாரதி
பூவும் பொட்டும்
(புதிய பிரதி)

நாகம்மஸ் [சுன்னாகம்]
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ராமன் தேடிய சீதை
(புதிய பிரதி)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்
விஜயகுமாரி
அமுதா
From 4th
BLAZING FLOWERS

குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா - மஞ்சுளா
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்மன் கலர்)
அரிய சந்தர்ப்பம்! யாழ்ப்பாண மக்களுக்கு இதுவே கடைசி வாய்ப்பு காணத்தவறாதீர்கள்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
பணக்காரக் குடும்பம்
6-6-80 முதல் ஆறிலிருந்து அறுபதுவரை

லிடோ
போசனி 7868
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி -லதா
ஞானக்குழந்தை

வெற்றிகரமான 7-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன் ரசமலிங்கம்-டிஸ்கிரி கனகரத்தினம்- V. R.ஸ்ரீநடராசா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்

5-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
★ கமலஹாசன் (இருவேடங்களில்)
★ ஸ்ரீதேவி மற்றும் பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
குறிப்பு: மின்வெட்டு அமுலாகியுள்ள வேளைகளிலும் தடைகள் எதுவுமின்றி தொடர்ந்து காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

SANTHI JAFFNA Phone 7642
Daily 10 30, a m., 2-30 4-45, 7-00 & 9 45 P m.
2-nd Crowded Week
CORNEL WILDE—YAPHET KOTTO
'SHARKS TREASURE'
—SUSPENSE — THRILLER — COLOR—
ALSO SHOWING! Colombo Schools Cricket Match
Schools Please Contact Management For Special Shows
NEXT: Clint Eastwood "THE EIGER SANCTION" (Color)

வெற்றிகரமான 10-வதுவாரம்
புதன்கிழமை முதல் தினசரி 4 காட்சிகள்
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30 4-30 7 00 10-00
சுதாகர் - ராதிகா விஜயன் - ரதி
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 21-ம் திகதி செவ்வாய்க்கிழமை (3-6-1980)

மேடம்: இதயத்தைத் தொடும் சம்பவமொன்று இடம் பெறும். சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இடபம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள். இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்.

மிதுனம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எதிரிகள் காத்திருப்பர். ஆயுத பீடைக்கும் இடமளிக்கலாம். எதிலும் அவதானம் வேண்டும்.

கடகம்: இல்லத்தில் இனிமை தவழும் வெளியிடத் தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கு உயரும்

சிம்மம்: சிந்தையில் குழப்ப நிலை தோன்றக்கூடும். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலர் கடன்படவும் நேரிடலாம். தெய்வ நம்பிக்கை நன்று.

கன்னி: உள்ளப்பூரிப்பில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத் துறையில் தொழில் புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவர்.

துலாம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வுகள் கிடைக்கலாம். சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கமுடியும். ஓவியக் கலைஞர்களின் புகழ் பிரகாசிக்கக்கூடும். வெளியிடத் தொடர்புகள் வளர்வதற்கு இடமுண்டு.

விருட்சம்: பொருள் விடயத்திலும் இடமுண்டு. கடமையாற்றுமிடத்தில் கன் துடைப்புவேலை நடைபெறும். நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும். சிக்கலைத் தவிர்க்க.

தனு: எதிர்பாராத விளைவுகள் மூலம் செலவினங்கள் அதிகமாகும். சிலர் வாழ்க்கையில் கடன்பட நேரிடும். பிணிக்கும் இடம் கொடாதிருக்கவும்.

மகரம்: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். திடீர் பிரயாணத்திற்கு இடமுண்டு. உடல் நலம் பாதிக்கப்படக்கூடும். சுகாதாரம் பேணவேண்டும்.

கும்பம்: நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும். பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு.

மீனம்: செய்தொழிலில் தடைகள் உருவாகும். மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும். சகோதரர் ஒருவருடன் பகைத்துக்கொள்ளவேண்டியும் ஏற்படும். நிதானம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இந்திராவின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். ஜி. இராமச்சந்திரனின் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளமை பாராட்டத்தக்கது. திருமதி இந்திராகாந்தி தமிழக சட்டமன்றத்தைக் கலைத்தது விரோதமான நடவடிக்கை என்பதை இத்தேர்தல் மூலம் தமிழக மக்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். [வெ]

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
மாமியார் வீடு
(புதிய பிரதி)

# "சோஷலிஸ அமைப்பின் மூலமே மொழி, இன பிரச்னைகளை தீர்க்கலாம்"

## பீட்டர் கெனமன் உரை

(யாழ்ப்பாணம்)

மக்கள் இதுவரைகாலமும் போராட்ட மூலமாக வென்றெடுத்த உரிமைகளும் சலுகைகளும் அபிவிருத்தியின் பேரினால் பறிக்கப்பட்டுள்ளது. பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட உணவுமானியங்கள் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக 300 ரூபாவிற்கு உட்பட்ட வருமானமுள்ளவர்களுக்கு மாத்திரம் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டிருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விற்குக்காரணம் உலகச்சந்தையில் விலையேற்றமென்று சொல்லப்பட்டாலும் உண்மையில் உலகவங்கியிடம் கடன் பெறுவதற்கு வங்கியில் விதிக்கப்பட்ட எங்கள் ரூபாவின் மதிப்புக் குறைப்பேயாகும்.

மேற்கண்டவாறு நீர்வேலியில் நடைபெற்ற விவசாயிகள் தொழிலாளர்கள் கருத்தரங்கில் உரையாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் திரு. பீட்டர் கெனமன் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது நாடு அபிவிருத்தியடைவதற்கு மக்கள் தியாகம் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள்.

இந்த முதலாளித்துவ அரசாங்கத்தின் கீழ் முதலாளிகளே அபிவிருத்தியடைந்து வருகின்றனர். கடந்த 3 வருடங்களாக சாதாரணப் பாமர மக்கள் சிறிதேனும் அபிவிருத்தியடையவில்லை. உள்ளூரில் உற்பத்தியாகும் வெங்காயம், மிளகாய் போன்ற உற்பத்திப் பொருட்களுக்கு மான்யம் வழங்கப்படுவதில்லை. மிளகாய் வெங்காயம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் வெளிநாட்டு விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் மான்யம் வழங்கப்படுகின்றது.

தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களை அமைப்பதன்மூலம் அவர்களின் உரிமைகளை வென்றுவில் பெற்றுக்கொள்ளலாம். இதே போரில் விவசாயிகளும் ஸ்தாபனரீதியாக இயங்குவதன் மூலம் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கமுடியும்.

சிறுபான்மையினரின் மொழி இன உரிமைகளை சோஷலிச அமைப்பின்மூலம் தான் தீர்க்க முடியும் இந்த முதலாளித்துவ அமைப்பைமாற்றநாம் போராடவேண்டும்.

இக் கருத்தரங்கிற்கு திருமதி வேதவல்லி கந்தையா தலைமை தாங்கினார். (வெ)

## தோல்வியில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### முதலாவது மொழிப்போராட்டம்

1938-ல் இந்தி கட்டாயச்சட்டம் செயற்படுத்தப்பட்டது இதுவே தமிழ்நாட்டில் தமிழர்களின் முதலாவது மொழிப் போராட்டம். அந்த நேரத்திலேதான் "தமிழா! நீதியில் நீ வாழ்ந்த வாழ்வு பாதியில் படுகுழிக்குப் போக அனுமதியாதே! இந்தியை நுழைய விட்டால் உனது மாபெரும் தமிழினத்தின் வருங்கால வாழ்வுக்கு வந்தது விபத்து" எனப் பெரியார் அறைகூவ, "இந்தி தமிழர் பண்பாட்டைச் சுட்டெரிக்கும் செந்தீ! தமிழ்ப் பூம்பொழிலை அழிக்க வரும் மந்தி! சாய்த்திடுவோம் அதனை முந்தி!" என மாமேதை அண்ணா முழக்கமிட, "இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே! செந்தமிழுக்குத் தீங்குவந்தபின்னும் இந்தத் தேகமிருந்தொரு லாபமுண்டா?" எனப் புரட்சிக் கவிஞர் கவிதைத் தேரிலே முழக்கம் இவைகளைத்தும் சேர்ந்து பள்ளிமாணவன் கலைஞர் மு. க. வைப் பொங்கியெழச் செய்தன. தனது பள்ளிக்கூடத்தையே பாசறையாக்க முற்பட்டார் மு. க. பள்ளி மாணவர்களுக்கே போதிக்கும் தலைவரானார். இந்தி திணிப்பால் ஏற்படக்கூடிய விளைவுகளை மாணவரிடையே புகுத்தி மாணவர்களைத் திரண்டெழச் செய்தார். அவர் படித்த பாடசாலையின் இந்திமொழி ஆசிரியருக்கே இந்தி திணிப்பு எதிர்ப்புப் பிரசுரத்தை வழங்கினார் அஞ்சா நெஞ்சப் படைத்த கலைஞர் மு. க. ஆசிரியரின் வெறுத்தலுக்கு ஆளானார்.

பள்ளி இறுதி வகுப்போடு படிப்பை முடித்துவிட்டு காலமெல்லாம் எதிர்நீச்சல் போட்டுக்கும் உழைப்பிற்கும், இழப்பிற்கும் மத்தியில் தன்னை அர்ப்பணித்து. ஆட்சித்துறையில் அனுபவம் எதுவுமின்றி 45வது வயதிலேயே தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை யேற்று, அனைத்து இந்தியாவும் ஏன்? வெளிநாட்டினரும் வியந்து பாராட்டும் எண்ணம் பல புதுமைகளைப் படைத்தவர் கலைஞர் மு. க.

ஆனால் இன்று... இலட்சிய வீரனுக்குத் தோல்வி நிலைப்பதில்லை.

அரசியல் ஒரு வழுக்கு நிலம் யாரைக்கும் அடி சறுக்குமென்பார்கள். அதேபோல் உலக அரசியல் கட்சிகளுக்கு கட்டிக் காட்ட முடியாத காரணத்தால் விபத்து ஏற்படுகின்ற போது அதை தலை நிமிர்ந்து நின்று சமாளிக்கக் கூடிய திறமை யாருக்குண்டோ, அவர்தான் உண்மையான [கலைஞர்] தலைவர்.

## பேச்சுவார்த்தை—

[3-ம்பக்கத் தொடர்ச்சி]

சந்திக்க நாம் தயாராக வேண்டும். சுகபோகங்களை, சொகுசான வாழ்க்கையை, பட்டம் பதவிகளை, சலுகைகளை தமிழினம் இழக்க தயாராக வேண்டும். தமிழ்ஈழம் ஒன்றே குறிக்கோளாக இருக்க வேண்டும்.

70-ம் ஆண்டுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேர்தலில் வெற்றி பெற்றால் சிங்கள மக்கள் இறைமையை மீட்போம் என்று கூறியிருந்தார்கள். அதன்படி தேர்தலில் வெற்றி பெற்றபின் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிங்கள மக்களின் இறைமையை மீட்க நவரங்கஹலவில் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டினார்கள். சிங்களமக்களின் இறைமையை மீட்கக்கூடிய அந்த அரசியல் நிர்ணய சபை கூட்டத்திற்கு தமிழரசு எம். பிக்களும் சென்றனர். இது தமிழினத்திற்கே அவமானமாகும்.

### தமிழ் தேசிய மன்றம்

77-ம் ஆண்டு தேர்தலில் கூட்டணியினர், தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழ் தேசிய மன்றம் அமைப்போம் என்றார்கள். ஆனால் 3 ஆண்டுகள் எதுவும் நடக்கவில்லை திருமதி சிறிமாவுக்கு சிங்கள இறைமையை மீட்க கூட்டம் கூட முடியுமென்றால் கூட்டணித் தலைவர்களுக்கு முடியாதா? அப்படி தேசியமன்றம் அமைத்தால் பாராளுமன்றம் செல்ல முடியாது, சுகபோகங்கள் அனுபவிக்க முடியாது என்று கூட்டணித் தலைவர்களுக்குத் தெரியும் அதனால் தான் காலத்தைக் கடத்துகிறார்கள். ஆயுதப் போராட்டத்திற்கு அஞ்சுவதுபோல்தான், தேசிய மன்றம் அமைக்கவும் கூட்டணியினர் அஞ்சுகிறார்கள். மீண்டும் எம். பிக்களாக வருவதற்கு இப்பவே தயார் செய்தல் என்பதால், இப்படியான பிரச்னைகளில் கூட்டணித் தலைவர்கள் தலையிட விரும்பவில்லை. [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசிறந்த இயந்திரமூலம்
போட்டோஸ்ரட்
பிரதிகள் செய்து
பெற்றுக்கொள்ள
பாரத் சென்ரர்
178, நவீனசந்தை,
(புதிய கட்டிடம் உள்பகுதி)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

தேமஸ் பிளாஸ்கள்
ஒலிப்பதிவு நாடாக்கள்
கமராக்கள்
இன்னும் பல
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை,
(புதிய கட்டிடம் உள்பக்கம்)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

## புதிய அ. தி. மு. க; எம். எல். ஏக்கள் இன்று கூடுவர்

(சென்னை)
தமிழக சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய அ. தி மு. க. உறுப்பினர்கள் இன்று செவ்வாய்க்கிழமை சென்னையில் கூடுகின்றனர்.

நடந்து முடிந்த தேர்தலில் அ தி மு க தலைமையிலான கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றது தெரிந்ததே.

129 புதிய உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் பங்குபற்றுவர். (இ)

## மாணவரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா பணத்திற்கு வரவு—செலவு இல்லையென்றும், 250 மாணவர் வரை இருந்த மாணவர் விடுதியில் 25 மாணவரை மட்டும் வைத்துப் பாலும், பிழிந்த தேங்காய்ப் பூச் சம்பலும் வழங்குவதாக மாணவர் தலைவர்கள் கூறினார்கள்.

கடந்த 10 வருட காலமாக பல மாணவர்கள் விலகிச் சென்றுவிட்டதாகவும், பாடசாலையில் மாணவனைச் சேர்க்கும்போது பெற்றோரை, ஆசிரியரை, பழைய மாணவரை அதிபர் மதிப்பதில்லையென்றும் அவர்கள் கூறினார்கள்

### மரவள்ளி நட்டால்

கிரிக்கெட் துறையில் முதன்மைபெற்ற எமது பாடசாலை மைதானத்தில் மரவள்ளி நட்டால் பலனுண்டு என்று அதிபர் ஆலோசனை கூறுவதாகவும், கிரிக்கெட், உதைபந்தாட்டம், மெய்வல்லுநர், ஹொக்கி, கூடைப்பந்து விளையாட்டுகளில் கடைசி கட்டத்திற்கு வந்துவிட்டதாகவும் மாணவர் தலைவர்கள் தெரிவித்தனர்.

கல்வியமைச்சில் கிடைக்கவிருந்த பணிப்பாளர் பதவியை உதறித் தள்ளிவிட்டுக் கல்லூரி அதிபர் பதவியைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### சந்தர்ப்பம் இழக்கச்செய்தனர்

18 வயதிற்குக் கீழ் அகில இலங்கை உதைபந்தாட்டத் தெரிவுக்குழுவில் இடம்பெற்ற மத்திய கல்லூரி மாணவனைச் சந்தர்ப்பம் இழக்கச்செய்துவிட்டாரென்றும் தெரிவித்தனர்.

கால் நூற்றாண்டாக கல்லூரிக்குச் சேவை செய்த ஆசிரியர் திரு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளதாகவும், வஞ்ஞான ஆசிரியரும் எவ்வித காரணமுமின்றி இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள்.

அதிபர் வெளியேறும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் கூறினார்கள்.

யாழ்ப்பாணம் எம்.பி திரு. வெ யோகேஸ்வரன் மீண்டும் அவ்விடம் வந்து மாணவர் தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

"நானும் மாணவனாக இருந்தபோது இப்படியான பிரச்சினைகள் வந்து தீர்க்கப்பட்டுள்ளதாக யாழ் எம்.பி. கூறியபோது, "நீங்கள் மாணவனாக இருந்தகாலத்தில் இப்படியான அதிபர்கள் இருக்கவில்லை" என மாணவர் தலைவர் ஒருவர் கூறினார்.

### தந்தை வழியில் உண்ணாவிரதம்

"நாம் தந்தை செல்வா காட்டிய அறவழியில் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளுகிறோம். உண்ணாவிரதத்தை கைவிடும்படிகூறும் நீங்கள் தமிழ்ஈழக் கோரிக்கையை கைவிட்டால் நாமும் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக மாணவர் தலைவர்கள் தெரிவித்ததோடு யாழ் மாநகர முதல்வரின் மகன் எம்முடன் போராட்டத்தில் கலந்துகொள்ளாது வகுப்பிற்குச் சென்றுள்ளதையும் சுட்டிக் காட்டினர்.

### வெளியேற அதிபர் சம்மதம்

வடமாநிலக் கல்வி அதிபதி யாழ் மத்திய கல்லூரி அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தியபின் உண்ணாவிரதத்தை மேற்கொண்ட மாணவர்கள் மத்தியில் பேசுகையில் கூறியதாவது!

"ஒருவாரத்தில் இடமாற்றம் பெற்றுச்செல்ல அதிபர் சம்மதித்துள்ளதாகவும் பார்க்கொக் செல்லுங் கோஷ்டியில் மத்திய கல்லூரி மாணவன் போலையும் அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் ஆசிரியர் இடமாற்றம், மாணவர் பழிவாங்கல் ஆகிய விஷயங்கள் இடம்பெறாது கவனிப்பதாகவும் அதற்கு ஒருவார கால அவகாசம் தரும்படியும் அதுவரை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படியும் கேட்டுக்கொண்டார்.

### உண்ணாவிரதத்தை கைவிடப்போவதில்லை

"அதிபரை மாற்றினாலன்றி உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை" என்றும் தாங்கள் சாகும்வரை இரவுபகலாக உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் தாங்கள் இறந்தபின்பாவது எமது சந்ததியினர் சுதந்திரத்துடன் கல்வி பயிலட்டும் என்றும் தெரிவித்தனர்.

மாணவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் எவ்வித சமரச முடிவும் ஏற்படவில்லை. தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது. மாணவர்கள் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவிருக்கின்றனர். (கொ)

## தமிழகத் தேர்தல் முடிவுகள்

கட்சிகள் நிலவரம்:

| | |
|---|---|
| அ. தி. மு. க. | 129 |
| தி. மு. க. | 38 |
| இ காங்கிரஸ் | 30 |
| இ மா. கம்யூனிஸ்ட் | 11 |
| இ. கம்யூனிஸ்ட் | 10 |
| ஜனதா (ஜே பி) | 02 |
| காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் | 06 |
| தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் | 04 |
| சுயேச்சை | 01 |
| ஏனையவை | 03 |

| | |
|---|---|
| அ.தி.மு.க கூட்டணி | 162 |
| தி.மு.க.கூட்டணி | 69 |

## தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம்: இது ஏமாற்றமல்ல

### கலைஞர் கருணாநிதி கருத்து

(சென்னை)
"தேர்தலில் வெற்றி தோல்வியென்பது சகஜம் அதில் ஏமாற்றமடைய எதுவுமில்லை."

தி மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி, தமிழ்நாடு தேர்தல் குறித்து நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஏழைகளுக்கு ஒரு கிலோ அரிசியும், வேலையற்றவர்களுக்கு நாளொன்றுக்கு ஒரு ரூபாவும் உதவியாக வழங்கப்படுமென அ தி மு க அளித்த வாக்குறுதியை நம்பி மக்கள் அவர்களை ஆட்சி பீடத்திற்குத் தெரிவுசெய்துள்ளனர். புதிய அ தி மு க அரசு மக்களை ஏமாற்றுமல் மேற்சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் தமிழ்நாட்டில் திமுக - இந்திரா காங்கிரஸ் கூட்டணியை எதுவிதத்திலும் பாதிக்காது என்றும் திரு கருணாநிதி கூறினார். (இ)

## சுப்பிரமணியம் இன்று புதுடில்லி செல்கிறார்

(சென்னை)
தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலுக்கு முன்பும்பின்புமிருந்த நிலை குறித்து இந்திராகாங்கிரஸ் தலைமைப்பீடத்துக்கு எடுத்துச்செல்லும் பொருட்டு தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு எம். பி சுப்பிரமணியம் இன்று புதுடில்லி செல்கிறார். [ ]

## ஆனமடுவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடைத்தேர்தலில் வெற்றியீட்டிய திரு. அசோகா வடிவமங்காவவையும், பிரதியமைச்சர்களான திரு. பேர்ஸிசமரவீர திரு.கே டி. எம். பண்டாரஆகியோரையும் அவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவையே தேர்தல் வெற்றிக்குக் காரணமென இம்மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (ம)

## 'ஆரியா' கடல் பிராணி இனம் அழிந்துவிட்டாதா?

(மன்னார்)
இலங்கைத் தீவிலேயே மன்னார் பகுதி கடலில் மட்டும் காணப்படுவதும் ஆங்கிலத்தில் டுகொங் எனவும் தமிழில் ஆவுரியா எனவும் அழைக்கப்படும் கடல் பிராணி மன்னார் கடலில் முற்றாக மறைந்து விட்டது போல் தெரிகிறது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது மன்னார் பகுதி கடலில் எங்கு தேடியும் ஆவுரியா என்ற கடல் பிராணி கிடைக்கவில்லையாம். (ஈ)

## சாரணர் இயக்கம் புனரமைப்பு

(மன்னார்)
மன்னார் மாவட்ட சாரணர் இயக்கத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராயப்பட்ட ஆலோசனைக் கூட்டம் அண்மையில் மன்னார் மாவட்ட சாரணர் இயக்கத்தின் தலைவரும் அரசாங்க அதிபருமான திரு. டெனிஸ் பெர்னாண்டோ தலைமையில் கச்சேரியில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இம்மாவட்ட சாரணர் இயக்கத்தைப் புனரமைத்து தேசிய சேவை மன்ற இயக்கத்தின் ஆதரவுடன் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. (ஈ)

இன்று மாலை
யாழ். திறந்தவெளி அரங்கில்
மேஜர்
சுந்தரராஜன்
திரைப்பட நடிகர்கள்
நடிக்கும்
சென்னை என்னெஸ்ஸென் தியேட்டர்சாரின்
கல்தூண்
தலைமை: யாழ். மே. ம. வ. இராசா விஸ்வநாதன்
தமிழகத்தில் 150 தடவை மேடையேறி
பரிசுபெற்ற நாடகம்
திரைப்படம்போல் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நாடகத்தைக்
காணத்தவறாதீர்கள்;
டிக்கட் விபரம்
ரூபா 5, 10, 15, 25, 50
நாடகம்முடிந்தபின்வெளியிடங்கள்
செல்வதற்கு பஸ்வசதி உண்டு

தேவை
இரண்டு நில அளவையாளர்கள் தராதரம், அளவையியல் உயர் டிப்புளோமா தராதரப்பத்திரம், பாஸ்போட் ஆகியவற்றுடன் நேரில் சந்திக்கவும். 281, மடம்வீதி, யாழ்ப்பாணம். 5941

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தொடர்பகத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜூன் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. CE/8948/ 78, The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu, Phone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org